20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் ஆகி இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன. அவ்வீடுகளை செப்பனிட்டு சரிசெய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளை மராமத்து செய்யும் பணிகள் எல்லாம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக செய்யப்படுகிறது. மிகவும் அத்தியாவசியமான தொகுப்பு வீடுகளை மராமத்து செய்ய வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்துகொள்ளலாம். ஆதி திராவிடர் நலத் துறைமூலமாக இந்த மாதிரி மராமத்து செய்வதற்கென்று தனியாக நிதி எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

130—

படகு தங்குதளம்

***19470—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தின் மேற்குப் பகுதியில் பக்கிங்காம் கால்வாயை ஆழப்படுத்தி விசைப்படகுகள் தங்குதளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் மேற்குப் பகுதியில் பக்கிங்காம் கால்வாயை ஆசிய வளர்ச்சி வங்கி

2008 ஏப்ரல் 21]

நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர உதவி திட்டத்தின்கீழ் தூர் வாரி ஆழப்படுத்திடும் நடவடிக்கை துறையின் பரிசீலனையில் உள்ளது. தூர் வாரும் பணி மேற்கொள்ள தேவையான ஆய்வுகள் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆழ்கடல் மேலாண்மைப் பிரிவின்மூலம் மேற்கொள்ளப்பட்டன. சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்ட ஆய்வறிக்கையின் அடிப்படையில் மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்திடமிருந்து இத்திட்டத்திற்குச் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று பெறப்பட்டுள்ளது. தூர் வாரும் திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும்பொருட்டு விரைவு ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் தயாரிக்கப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் பெற அனுப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், தூர் வாரும் பணிக்கென மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையினை ஆராய்ந்து இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து பரிந்துரை செய்யும்பொருட்டு உயர்மட்ட தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்று அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மீன் வளத் துறை ஆணையர் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு விரைவில் கூடி இத்திட்டம் தொடர்பான ஆய்வு அறிக்கையினை ஆராய்ந்து அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில் அரசின் நிர்வாகம் மற்றும் நிதி ஒப்புதல் பெற்று இத்திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும். மேலும், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தை நவீனப்படுத்திடவும், கூடுதல் தங்குதள வசதிகளை ரூபாய் 1 கோடியே 44 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஏற்படுத்திக்கொடுத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான திட்ட அறிக்கை தயாரித்திட ஆலோசனை நிறுவனமான திருவாளர்கள் ஸ்மெக் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாய்வுப் பணிகள் வரும் செப்டம்பர் 2008-ல் முடிவடையும். ஆய்வுப் பணிகள் முடிவுற்றதும் பெறப்படும் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் ஒப்புதல் பெற்று 18 திங்கள்களில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டம் முடிவுற்றதும் பழையாறு பகுதியில் வாழும் மீனவர்கள், அவர்களது விசைப்படகுகளை மீன் பிடி துறைமுகத்தில் பாதுகாப்பாக நிறுத்திட இயலும் எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தெளிவான விளக்கத்திற்கு எனது சீர்காழி தொகுதி பழையாறு கிராம மீனவ மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பணி விரைந்து எப்போது முடிக்கப்படும் என்று கேட்டுக்கொள்வதோடு, பக்கத்தில் மீனவ கிராமங்களாக இருக்கக்கூடிய திருமுல்லைவாசல், தென்னாம்பட்டினம், பெருந்தோட்டம் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய பக்கிங்காம் கால்வாயைத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்தில் திருமுல்லைவாசல், தென்னாம்பட்டினம், பெருந்தோட்டம் மற்றும் கீழையூர் கிராமங்களில் பக்கிங்காம் கால்வாயை 4 1/2 கி.மீ. நீளத்திற்கு ஆழப்படுத்த ரூ.1 கோடியே 74 லட்சம் ஒதுக்கீடு கோரிய முன்மொழிவு, 9-4-2008 அன்று நடைபெற்ற 12-வது உயர்மட்டக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கான அரசாணை வெளியிட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் ஒருமுறை நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.